# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 24, 2021

Weekly E-paper • July 24, 2021




## பா.ம.க கோரிக்கையை ஏற்றது தமிழக அரசு!

சுப. வீரபாண்டியன்

### பெகாசஸ் - உளவுபார்ப்பு

மா.உதயகுமார்

### வெற்று முழக்கங்கள்?

தலையங்கம்

### தினமலரும் கொங்கு நாடும்

சாரதா தேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 24, 2021

Weekly E-paper • July 24, 2021


# பா.ம.க கோரிக்கையை ஏற்றது தமிழக அரசு!

சுப. வீரபாண்டியன்



2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில், பாமகவின் சார்பில், முன்னாள் அதிமுக அமைச்சர்கள் மீதான 200 பக்க ஊழல் பட்டியலை ஆளுநரிடம் அக்கட்சியின் தலைவர் ஜி.கே. மணி அளித்திருந்தார். அதனை ஆளுநர் 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலருக்கு அனுப்பி வைத்தார். ஆனால் முந்திய அரசு அதன் மீதான எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இதனால் பாமகவிற்கும் அக்கட்சித் தொண்டர்களுக்கும் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டது.

அந்த ஏமாற்றத்தைப் போக்கும் வகையில் அந்த மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசின் சார்பில் நேற்று வழக்கறிஞர் சண்முகசுந்தரம் உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாமக எதிர்க்கட்சி வரிசையில் உள்ளது என்று பார்க்காமல், அதன் கோரிக்கையை இன்றையத் தமிழக அரசு எடுத்துள்ளமை, அரசின் ஜனநாயகப் போக்கினைக் காட்டுவதாக உள்ளது! இந்த நடவடிக்கையைப் பாமக வாழ்த்தி வரவேற்கும் என்று எதிர்பார்க்கலாம்!

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசின் ஒவ்வொரு நடவடிக்கையும் ஜனநாயகத் தன்மையும், இனஉணர்வும், பெருந்தன்மையும் உடையதாக உள்ளது.

பொது மற்றும் மறுவாழ்வுத் துறை ஆய்வுக் கூட்டத்தில் நேற்று கலந்துகொண்ட முதமைச்சர், ஈழ மக்களின் துயர் துடைக்கத் தனி வழிகாட்டுதல் குழு ஒன்று அமைக்கப்படும் என்றும், அகதிகள் முகாமில் அடிப்படை வசதிகள் கூட்டப்படும் என்றும் அறிவித்துள்ளார். குடிநீர், கழிவறை, தெருவிளக்கு, மின்வசதி ஆகியவவற்றைச் சரியாகப் பராமரிப்பதுடன், அவர்களுக்கான மாதாந்திரக் கொடையை உயர்த்திக் கொடுக்கவும், துணிகள், சமையல் பாத்திரங்கள் வழங்குவதற்கான நிதிஒதுக்கீட்டை உயர்த்திடவும் கூறியுள்ளார்.



ஈழ மக்களுக்கு இனிய செய்தியாகவும், ஈழத்திற்கு நாங்கள்தான் மொத்தக் குத்தகைதாரர்கள் என்று கூறித் திரிவோருக்குப் பேரிடியாகவும் இச்செய்தி அமைந்துள்ளது!

இவ்வாண்டில், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விவசாயிகளுக்கு 11,500 கோடி ரூபாய் கடனாக வழங்குவதெனவும் தமிழ் நாடு அரசு முடிவு செய்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத் திட்டத்தில் பணிபுரியும்பணியாளர்கள் ஊதியத்தை ரூ.275 லிருந்து ரூ. 300 ஆக உயர்த்திடவும் முடிவு செய்துள்ளது தமிழ்நாடு அரசு!

தமிழே தமிழ்நாட்டில் ஆட்சிமொழி என்பது வெறும் ஏட்டளவில் இல்லாமல், நடைமுறைக்கு அதனைக் கொண்டுவர அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்ற அறிவிப்பும் வந்துள்ளது.

பத்தாண்டு கால இருள் நீங்கித் தமிழ்நாட்டின் பொற்காலம் தொடங்கியுள்ளது!


SubaVeerapandian - belong to Dravi...
@Suba_Vee

"2013, 2015 ஆம் ஆண்டுகளில், முன்னாள் அதிமுக அமைச்சர்கள் மீது, #பாமக சார்பில் ஜி.கே.மணி கொடுத்த 200 பக்க ஊழல் அறிக்கை மீது நடவடிக்கை"_ உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு உறுதி! எதிர்க்கட்சியின் வேண்டுகோளையும் ஏற்கும் ஜனநாயகப் போக்கு!

# பெகாசஸ் – உளவுபார்ப்பு

மா.உதயகுமார்

உளவு பார்ப்பது அல்லது வேவு பார்ப்பது என்பது காலங்காலமாகத் தொடர்ந்து வரும் ஒன்றாகும். ஒரு நாட்டை இன்னொரு நாட்டிடம் இருந்து காத்துக்கொள்ள உளவு பார்ப்பது என்பது மன்னர்கள் காலந்தொட்டு நடந்து வருவதை நாம் பார்க்கிறோம். மற்ற நாடுகளில் உள்ளச் சூழலை உளவு பார்ப்பது என்பதையும் தாண்டிச் சொந்த நாட்டின் குடிகளையும் உளவு பார்க்கக்கூடியச் செயல்களும் எப்போதும் நடந்து வருகின்றன. அரசாள்பவர்களைக் கடந்து சாமானிய மக்களும்கூட வேவு பார்க்கிறார்கள். கணவன் மனைவியை உளவு பார்ப்பது, பெற்றோர்கள் குழந்தைகளை உளவு பார்ப்பது என்பதும் இந்தச் சமூகத்தில் நிகழக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கிறது. எல்லாவற்றையும் ஒரே மாதிரியாக அளவிட முடியாது என்பதும் உண்மையாகும். சில சமயங்களில் அறம் தவறி செயல்படுபவர்கள் செய்யும் குற்றங்களைக்கூட இப்படித்தான் கண்டுபிடிக்க முடிகிறது. அதற்காகத்தான் அரசாங்கம் உளவுத்துறை என்று தனியாக ஒரு துறையை வைத்திருக்கிறது. இருந்தும் அரசாள்பவர்கள் இன்று தொழில்நுட்ப வளர்ச்சியின் துணைகொண்டு யாரை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் கண்காணிக்க முடியும் என்கிற நிலை உருவாகியிருக்கிறது. இது உலகளாவிய ஒரு பெரும் விவகாரமாக இன்று உருவெடுத்திருக்கிறது. இது ஒரு கண்ணுக்குத்தெரியாத உலகமாக இயங்கி வருகிறது.




பெகாசஸ் போன்ற உளவு பார்க்கும் செயலிகள் *(spyware)* உருவாக்கப்பட்டு, வேவு பார்ப்பதற்காக உலகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும், அதில் யார் யார் வேவு பார்க்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற 50 ஆயிரம் தொலைபேசி எண்கள் கொண்ட ஒரு பட்டியலையும் ‘தி கார்டியன்’ இதழ் வெளியிட்டிருக்கிறது. ‘சைபர் சர்வெயலன்ஸ்’ என்று சொல்லப்படும் இணையத் தொழில் நுட்பச் செயல்பாடுகளைக் கண்காணிக்கக் கூடிய இந்த முறை உலகம் முழுவதும் தவறாகப் பயன்படுத்தக்கூடியப் போக்குகளே நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன.

எப்படி, தற்காத்துக்கொள்ளப் பயன்படுத்தக்கூடியக் கருவிகளை அழிவு காரியத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றனவோ, அதே போன்றுதான் இந்த பெகாசஸ் போன்ற செயலிகள் தீவிரவாதத்திற்கு எதிராகவும் குற்றச் செயல்களுக்கு எதிராகவும் மட்டுமே பயன்படுத்தப்படும் என்கிற உறுதிப்பாட்டுடன் உருவாக்கப்பட்டு பின்னர் தனிமனிதர்களை, இயக்கங்களை, கட்சிகளை, பத்திரிகையாளர்களை, சமூகச் செயற்பாட்டாளர்களை, மனித உரிமை ஆர்வலர்களை வேவு பார்க்கப் பயன்படுத்தப்படுகின்றன.

நாம் சாதாரணமாக ஸ்மார்ட்போன் பயன்படுத்தினாலே அதில் உள்ள மற்ற செயலிகள் *(softwares)* போல் இது போன்ற உளவு பார்க்கும் செயலிகளும் *(spy-wares)* செயல்படுத்தப்பட்டு, நம்முடைய தொலைபேசியில் இருக்கக்கூடிய அனைத்துத் தகவல்களையும் எடுத்துக்கொள்ளவும் முடியும், இல்லாதவற்றை இடம்பெறச் செய்யவும் முடியும். அதேபோல் அதுவே ஒரு இரகசிய ஒலிவாங்கியாகவும் செயல்பட்டு நாம் பேசக்கூடிய அனைத்தும் இன்னொருவர் கேட்கும் வசதியும் கொண்டது.

ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் இந்த பெகாசஸ் செயலி மூலம் வேவு பார்க்கப்பட்டவர்கள் பட்டியலை ஊடகங்களுக்குக் கொடுத்திருக்கிறது. இதில் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பது *Financial Times, CNN, The New York Times, France 24, The Economist, Associated Press, Reuters* போன்ற உலகின் முன்னனிப் பத்திரிக்கைகளின் ஆசிரியர்களும் பத்திரிக்கையாளர்களும் தான்.

இந்தப் போக்கு என்பது உலகைச் சர்வாதிகாரிகளின் கைகளுக்குள் கொண்டுபோய்ச் சேர்க்கக் கூடிய ஒன்றாக இருக்கிறது. அவர்கள் கையிலிருக்கும் தொழில்நுட்பம் அணுஆயுதங்களைவிட நூறு மடங்கு ஆபத்தானது. இந்திய அளவில் இங்கே நடைபெறக்கூடிய பாசிச ஆட்சிக்கு இதுபோன்ற உளவு பார்க்கக்கூடிய ஸ்பைவேர் எவ்வளவு பெரியக் கொடையாக அமைந்திருக்கும் என்பதை நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை. நாடெங்கும் மூடநம்பிக்கையையும், கும்பல் கலாச்சாரத்தையும், பிற்போக்குத் தனத்தையம் வளர்த்தெடுக்கும் இவர்கள் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை எவ்வளவு சாதகமாக முறையற்ற வகையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் உணர வேண்டும்.

ஒரு பக்கம் நாடாளுமன்றத்தில் ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் கொடுத்த அந்தப் பட்டியலே பொய்யானது என்றும் இது மக்களின் பிரச்சினையைப் பேசவிடாமல் இந்தியாவில் குழப்பத்தை விளைவித்து அரசின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகச் செய்யப்படுகிறது என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். இன்னொரு பக்கம் ஒரு அரசுக்கு அனைவரையும் உளவு பார்க்க உரிமை இருக்கிறது என்றும் இதில் ஒன்றும் தவறில்லை என்றும் பதிவிட்டு வருகிறார்கள்.

பா.ஜ.கவினர் இப்படியெல்லாம் செய்யவில்லை என்றால்தான் நாம் வியப்படையவேண்டும். அமெரிக்காவின் வாட்டர் கேட் ஊழலை, இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. தேர்தலில் எதிர்த்தரப்பினர் வியூகங்களை உளவு பார்த்து வெற்றி பெற்ற அதிபர் நிக்சன், பின்னாளில் அவர் உளவு பார்த்தது கண்டுபிடிக்கப்பட்டு வாட்டர் கேட் ஊழலாக உருவெடுத்து அவர் பதவி விலகினார் என்பது வரலாறு. ●

## திண்டுக்கல் அமைப்புக் கூட்டம்



18.7.2021 அன்று திண்டுக்கல் மாவட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. கூட்டம் மாவட்டத் தலைவர் இனியன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் ஆனந்தராஜ் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில், எதிர்வரும் ஆகஸ்டு மாதம், காலம் சென்ற பெரியார் பெருந்தொண்டர் அய்யா வே.ஆனைமுத்து அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி நடத்துவதென்றும், கருஞ்சட்டைப்பதிப்பகத்தின் இரண்டு புதிய நூல்களின் அறிமுகக் கருத்தரங்கம் நடத்துவதென்றும், செப்டம்பர் 17 அன்று தந்தை பெரியாரின் பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## மாநில அமைப்புச்செயலாளர் சுற்றுப்பயணம்:

நாள் : 25.07.2021 ஞாயிறு

காலை 10 மணி: பெரம்பலூர்

பிற்பகல் 3 மணி: திருவாரூர்

மாலை 6 மணி: தஞ்சை

பேரவையில் இணைவதற்கு முன் வந்துள்ள தோழர்களைச் சந்திக்கவும், புதிய பொறுப்பாளர்களை நியமிப்பது தொடர்பாகவும் இச்சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வருகிறார் அமைப்புச் செயலாளர் தோழர் புலேந்திரன். பேரவைத் தோழர்கள் ஒத்துழைப்புத் தருமாறுக் கேட்டுக்கொள்கிறேன்.

சுப.வீரபாண்டியன்,
பொதுச்செயலாளர்

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## வெற்று முழக்கங்கள்...?

அதிமுகவின் இரட்டைத் தலைமையின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகிய இருவரும் இணைந்து கூட்டாக ஓர் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள்.

அந்த அறிக்கையில் நீட் தேர்வை ரத்து செய்யவேண்டும் என்றும் பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்க வேண்டும் என்றும், சமையல் எரிவாயு சிலிண்டருக்கு ரூ.100 மானியம் தரவேண்டும் என்றும் கோரிக்கையை வைத்து அதற்காக 28ஆம் தேதி காலை 10 மணிக்கு கவன ஈர்ப்பு முழக்கங்களை முழங்கப் போவதாகவும் கூறியிருக்கிறார்கள்.

கடந்த 10 ஆண்டுகள் தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த முன்னாள் முதல்வர்களான ஓபிஎஸ், இபிஎஸ் இருவருக்கும் எங்கே என்ன கேட்கவேண்டும் என்பது கூடத் தெரியாமல் இருப்பது வியப்பாக இருக்கிறது.

கடந்த ஆட்சியில் நீட் தேர்வைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்ததே எடப்பாடி தலைமையிலான அதிமுக அரசுதான். இன்று நீட் தேர்வை ரத்து செய்யவேண்டும் என்று அவர்கள் சொல்வது ஒரு ஏமாற்று நாடகமாகத் தெரிகிறது.

பெட்ரோல், டீசல் விலைகளை நாளொரு மேனி, பொழுதொரு வண்ணமாக ஏற்றிக்கொண்டே போவது மத்திய அரசு, எண்ணெய் நிறுவனங்கள்.

ஆகவே, மத்திய அரசைப் பார்த்து வைக்கவேண்டிய கோரிக்கையை மாநில அரசிடம் வைப்பது கேலிக்குரியதாக இருக்கிறது.

அது போலவே சமையல் எரிவாயு விலையும் மாதந்தோறும் ஏறிக்கொண்டே இருக்கிறது, மத்திய அரசின் 'தயவால்' .

இன்று இவர்கள் வைக்கும் கோரிக்கை முழக்கங்களை கடந்த காலங்களில் இவர்கள் செய்யவும் இல்லை, மத்திய அரசை வற்புறுத்தவும் இல்லை.

ஆட்சிக்கு வந்த திமுக அரசின் மக்கள் நலத்திட்டங்களும் அதுகுறித்தச் செயல்பாடுகளும் மக்களிடம் அமோக வரவேற்பைப் பெற்று வருகின்றன என்பது உலகறிந்த செய்தி.

இரட்டைத் தலைமையான அதிமுகவின் முழக்கங்கள் மக்களிடம் எடுபடாது.

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்,
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

# தினமலரும் கொங்கு நாடும் ஊதிப் பற்ற வைத்ததா?

சாரதாதேவி

2021 சட்டசபைத் தேர்தலில், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தொகுதியில் நின்று தி.மு.கவின் வேட்பாளர் திரு. கயல்விழி அவர்களால் தோற்கடிக்கப்பட்டவர் பா.ஜ.க.வின் முன்னாள் தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு.எல்.முருகன்.



அவருக்கு இணை அமைச்சர் பதவி கொடுத்து, ஒன்றிய அமைச்சரவைக்கு எடுத்துக்கொண்டது அவருடைய கட்சி! அவர் நன்றியுடன் திட்டமிட்டுத் தொடங்கியதுதான் கொங்கு நாடு சலசலப்பு! அவர் தன் சுய விவரத்தில் மாநிலப் பெயராக கொங்கு நாடு என்று குறிப்பிட்டதை, அடுத்த நாள் சிரமேற்கொண்டு பல கண் காது மூக்குகளுடன் தினமலர் நாளேடு செய்தியாக்கியது!

ஆம்! 10.7.2021 அன்று தலைப்புச் செய்தியே ஒன்றிய அரசு தமிழ்நாடு, கொங்கு நாடு என மாநிலத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டத்தை உருவாக்கிவிட்டது போலவும், தமிழ்நாட்டு முதல்வருக்கு செக் என்றும் ஒன்றிய அரசின் விளையாட்டு தொடங்கியதாகவும் அது செய்தி போட்டது.



Grasp Clothings Family Fashion Outlet

தினமலர்

நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்

# கொங்கு நாடு!

- தனி யூனியன் பிரதேசமாகிறது தமிழக மேற்கு மண்டலம்
- தி.மு.க.,வின் மோதல் போக்கால் மத்திய அரசு கோபம்
- ஸ்டாலின் அரசுக்கு 'விளையாட்டு' காட்ட பலே திட்டம்

– புதுடில்லி நிருபர்–

மத்திய அரசை, 'ஒன்றிய அரசு' என, தி.மு.க.,வினர் கூறி வருவதால் கடும் அதிருப்தியில் உள்ள மோடி அரசு, அதற்கு பதிலடி கொடுக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. தமிழகத்தின் மேற்கு பகுதியான கொங்கு மண்டலத்தை, 'கொங்கு நாடு' என்ற பெயரில், தனி யூனியன் பிரதேசமாக அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை துவக்கியுள்ளது.

**அன்று இரவே ஒரு நேர்காணலில் அய்யா சுபவீ அவர்கள் குறிப்பிட்டதைப் போல எல்லை மாவட்டங்களில் மொழிப்பற்றுக் குறைவாக இருக்கும், அங்கே மதவெறியையும், போலி தேசப்பற்றையும் விதைத்துவிடலாம் எனக் கணக்கிட்டு பா.ஜ.க தன் பரிவாரங்களை இறக்கி வடக்கு, தெற்கு, மேற்கு என எல்லாத் திசைகளிலும் எல்லையோர மாவட்டங்களில் வேலை செய்கிறது.**

அதற்கு மூட்டைப் பொய்களும், சில கலவரங்களும், கற்பனை எதிரியும் தேவை! அதுவே நாட்டில் ஒன்றிய அரசின் தோல்விகளை மக்கள் மறக்கச் செய்யும் சிற்றாயுதமாகவும் பயன்படும். அந்த சிண்டு முடியும் வேலையைத்தான் தினமலர் முயன்றது. அதுவும் மேலிடத்தின் அணுக்க உத்தரவின் படியே நடந்தது என்பதை, அவ்விதழின் நிருபர் ஒரு வாசகருடனான தொலைபேசி உரையாடலில் தில்லியிலிருந்து கிடைத்த தகவல்களின்படியே அச்செய்தி போடப்பட்டதாக உளறியதிலிருந்து அறிய முடிகிறது.

மேற்கு மாவட்டங்களில் கணிசமான அளவில் பிற மாநிலத்தவர் இருப்பதாலும், இன்னும் சில அடிப்படைவாத, சாதியக் கருத்துருவாக்கங்களாலும் மேற்கைக் கைப்பற்றிவிடும் எண்ணம் பா.ஜ.க. வில் உருவாகி உள்ளதை யாராலும் மறுக்க இயலாது. அந்த ஆபத்தை உணர்ந்து கொங்கு மண்டலத்தில் கள ரீதியாக பல மாற்றங்கள் நிகழ்வதையும், பெரியாரிய இயக்கங்கள் கூடுதலாக கோவை உள்ளிட்ட பகுதிகளில் கவனம் செலுத்த முயற்சிகள் எடுப்பதையும் பார்க்கிறோம்.

இளைய சமுதாயம், கட்டாயம் இந்த அடிப்படைவாதங்களை உடைத்துக்கொண்டு முற்போக்குச் சிந்தனையுடன் சாதிய, வட்டாரப் பிரிவினைகளைத் தமிழ் மண்ணில் தோற்கடிக்கும்! பா.ஜ.க. வின் இந்தச் சதி முயற்சியை, தமிழ்நாடு தேறி வரும் இவ்வேளையில் ஊதிப் பற்றவைக்க எண்ணி, உள்ளபடியே ஊற்றி அணைத்திருக்கிறது தினமலர்!



## >> இரண்டு நூல்களை முதல்வர் பெற்றுக்கொண்டார்!

21.7.2021 அன்று வெளியிடப்பட்ட பேராசிரியர் சுபவீ அவர்களின் "திராவிடக் கூட்டம்" என்ற நூலும் பேராசிரியர் புரூனோ தொகுத்துள்ள சுபவீ அவர்களின் தொகுப்பான, "கலைஞரின் நெஞ்சுக்கு நீதி" ஆகிய 2 நூல்களின் முதல் படிகளை முரசொலி அலுவலகத்தில் தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,